**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

**O.S. No. 126/2022**

**2024ம் ஆண்டு மார்ச் மாதம் 1-ஆம் தேதி வெள்ளிக்கிழமை**

வா.சா.3 சாட்சியின் வாக்குமூலம் பிரமாணச்சட்டம் 1969, பிரிவு 6(1)ன்படி உதவியாளர் திரு.பி.இளங்கோவன் என்பவரால் உறுதிப்பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் ராஜா | தபெ/கபெ |
| ஊர் | வட்டம் |
| சாதி | சமயம் |
| வயது | தொழில் |

**முதல்விசாரணை:-**

நான் மானாமதுரை வட்டாட்சியராக பணிபுரிந்து வருகிறேன். நான் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் ஆஜராகிறேன். அழைப்பாணையில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். மானாமதுரை தாலுகா, அரிமண்டபம் குரூப் 1984-2003 சர்வே எண்.120/1 ஆவணங்கள் யார்பெயரில் உள்ளது என்றால் விஸ்தீரணம் 2.2.50 ஹெக்டேர் பட்டா எண்.256 ரூ.மேரி பெயரில் யு.டி.ஆர் 'அ' பதிவேடு உள்ளது. மானாமதுரை தாலுகா, அரிமண்டபம் குரூப் 1984-2003 சர்வே எண்.112/1 ஆவணங்கள் யார் பெயரில் உள்ளது என்றால் விஸ்தீரணம் 1.83.5 ஹெக்டேர் பட்டா எண்.11 அமல்தாஸ் பெயரில் யு.டி.ஆர் 'அ' பதிவேடு உள்ளது. மானாமதுரை தாலுகா, அரிமண்டபம் குரூப் 1984-2003 சர்வே எண்.112/2 ஆவணங்கள் யார் பெயரில் உள்ளது என்றால் விஸ்தீரணம் 1.82.0 ஹெக்டேர் பட்டா எண்.10 அற்புதமேரி பெயரில் யு.டி.ஆர் 'அ' பதிவேடு உள்ளது. 2003-2005 ஆண்டில் மேற்படி 3 சர்வே எண்களும் யார் பெயரில் உள்ளது என்றால் சர்வே எண்.112/1 அமல்தாஸ், சர்வே எண்.112/2 அற்புதமேரி, சர்வே எண்.120/1 மேரி பெயரில் உள்ளது. யு.டி.ஆர் சிட்டாவில் 2003-2005 மேற்படி 3 சர்வே எண்கள் யார் பெயரில் உள்ளது என்றால் சர்வே எண்.112/1, 112/2 கொள்ளிடம் மனைவி பாக்கியலெட்சுமி பெயரில் உள்ளது, சர்வே எண்.120/1 கொள்ளிடம் மகன் சிவனாண்டி பெயரில் உள்ளது. 2005லிருந்து தற்போது வரை மேற்படி 3 சர்வே எண்கள் யார் பெயரில் உள்ளது என்றால் பட்டா எண்.539 டி.பி.சி லிமிடெட், சென்னை. 2005க்கு பிறகு எதனடிப்படையில் பட்டா

மாறியது என்றால் டி.பி.டி நம்பர்.580 நாள்.20.09.2005ன் அடிப்படையில் மாறியது. மேற்படி 3 ஆவணத்திற்குரிய யு.டி.ஆர் சிட்டா மற்றும் அடங்கல் தாக்கல் செய்கிறேன். அது **சா.சா.ஆ.1** முதல் **சா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை இல்லை.**

**சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது**

**சார்பு நீதிபதி**
**மானாமதுரை**